திருமணங்களா?
திருவிழாக்களா?
பண்டிகைகளா?
உற்சவங்களா?



உங்கள் தேவைகளை நிறைவு செய்வோம்
எதற்கும் ஒருமுறை நாடுங்கள்
சி.சின்னத்துரை அன்பிரதர்,
யாழ்ப்பாணம் - போன் 284



பக்கங்கள் 6 விலை சதம் 40


# ஈழநாடு


The EELA NADU

மலர்: 20 ஆடி: 27 றம்ழான்: 7 இதழ்: 182
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-8-78



இல்லத்தரசிகளின் தொல்லைகளை நிறைவு செய்யலாம்!
ஃ சமையல் பொருட்கள்
ஃ அன்பளிப்புப் பொருட்கள்
ஃ அலங்காரப் பொருட்கள்
ஃ [illegible]ணிகள், பாத்திரங்கள்
இன்னும்பல...
சி.சின்னத்துரை அன்பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284





RECEIVED
PERIODICALS DIVISION
UNIVERSITY OF ... LIBRARY


# "பேரவைக்கு வெளியே மத்யூ இப்படி பேசுவாரா?

## யோகேஸ், அமிர் சவால்

### சட்டநடவடிக்கை எடுக்க முடியவில்லை என்கின்றனர்

(கொழும்பு)

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் யாழ். நாகவிகாரைக்கு அண்மையில் நடந்த பொதுக்கூட்டங்களில் யாழ். எம்.பி. திரு. வி. யோகேஸ்வரனும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும் அவரது மனைவி திருமதி அமிர்தலிங்கமும் பேசியதாகப் பேரவையில் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. சிறில் மத்யூவும் சன்சோனிக் கமிஷன் முன் யாழ். நாகவிகாரை பிரதம பிக்கு கடவத்துவ நந்தாராம நாயக்க தேரோ கூறியதை எதிர்த்து திரு. யோகேஸ்வரனும் திரு. அமிர்தலிங்கமும் நேற்று பேரவையில் குரல் எழுப்பினர்.

அமைச்சர் மத்யூவும் நாகவிகாரை பிக்குவும் இவற்றை வெளியில் கூறியிருந்தால் அவர்களை நீதிமன்றத்தில் சந்தித்திருக்கமுடியுமென்றும் இதை ஒரு சவாலாக அமைச்சருக்கு விடுவதாகவும் திரு. யோகேஸ்வரனும் திரு. அமிர்தலிங்கமும் தெரிவித்தனர்,

தேசிய அரசுப் பேரவை நேற்றுக்காலை கூடியபோது யாழ் எம். பி, திரு. வெ. யோகேஸ்வரன் முதலில் பேசினார். அவர் தமது பேச்சில் கூறியதாவது:-

#### தமிழர் பண்பாடு

"தமிழருக்கென்று ஒரு தனிக்கலாசாரம் உண்டு. பண்பாடு தவறுதவர்கள் தமிழர்கள். கலாச்சாரம், பண்பாட்டில் ஊறிய தமிழர்கள், வழிவழியாக மரபுவழியில் வந்தவர்கள்; அதில் ஊறித்திளைத்தவர்கள்.

"இப்பேரவையில் கடந்த செவ்வாய்க்கிழமை(8-ம் திகதி) உரையாற்றிய கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. சிறில் மத்யூ; என்னைப்பற்றி. மிகவும் பொருத்தமற்ற முறையில் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் காலத்தில். நாகவிகாரைக்கு அருகில் நடைபெற்ற கூட்டமொன்றில் சிங்களவரின் தோலை உரித்து அதில் செருப்புத் தைக்கவேண்டும் என்று நான் கூறியதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இது உண்மைக்குப் புறம்பானது; முழுக்க முழுக்கப் பொய்யானது. இவ்விதமாக நான் கீழ்த்தரமாகப் பேசியிருந்தால், கலை கலாச்சாரம் பண்பாட்டில் ஊறிய தமிழ்மக்கள் என்னை தங்களின் உறுப்பினராகத் தெரிவு செய்து அனுப்பியிருக்க மாட்டார்கள்.

#### விகாரைக்கு அருகில்நான் வீடு

"எனது வீடு நாகவிகாரைக்கு அருகில்தான் இருக்கிறது. நான் மிகுந்த கடவுள்பக்தியுள்ளவன். மனதினால்கூட ஒருவனுக்குத் தீங்குசெய்ய நினைக்காதவன் நான்.

"அமைச்சர் மத்யூ, என்னைப்பற்றி இப்பேரவையில் உரையாற்றுமல், பேரவைக்கு வெளியே இவ்விதமாகக் குறிப்பிட்டிருந்தால், அவரை நான் நீதிமன்றத்தில் சந்தித்திருப்பேன்."

அமைச்சர் என்னைப்பற்றி உண்மைக்குப்புறம்பானமுறையில் இப்பேரவையில் தெரிவித்த கருத்துப்பற்றி நான் சட்ட அறிஞர்களுடன் ஆலோசித்தேன். பேரவையிலன்றி பேரவைக்கு வெளியே அமைச்சர் என்னைப்பற்றி இவ்விதமாக அவதூறுன முறையில் உரையாற்றியிருந்தால், அவர் மீது நீதிமன்றப மூலம் வழக்குத் தொடர்ந்திருப்பேன் என்பதை ஒரு சவாலாக இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

"அமைச்சர் நினைப்பது போல, அவ்விதமாகப் பேசும் எண்ணம் அன்றும் இருக்கவில்லை; இன்றும் இல்லை; இனிமேலும் இல்லையென்பதையும், எமது கலை, கலாச்சாரம், பண்பாட்டுக்குப் புறம்பான கீழ்த்தரமான பேச்சை நான் எப்பொழுதும் பேசமாட்டேன் என்பதையும் பெருமையுடன் கூற விரும்புகிறேன்" என்று திரு யோகேஸ்வரன் கூறினார்.

#### அமிர்தலிங்கம் மறுப்பு

கூட்டணிச் செயலதிபரும், எதிர்க்கட்சித் தலைவருமான


6-ம் பக்கம் பார்க்க)


## 'அமிரி'ன் ஒழுங்குப் பிரச்னை பேரவையில் நிராகரிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுத் தேசிய அரசுப் பேரவையில் கிளப்பிய ஒழுங்குப் பிரச்னை, நீண்ட நேரம் சபையை ஒத்தி வைத்து ஆராய்ந்த பின்னர் சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டது.

நேற்றுக் காலை பேரவை கூடியபோது உள்ளூராட்சி அதிகார சபை குடியியல் உரிமைகள் ரத்துச் சட்டமூலத்தைப் பிரதமர் இரண்டாவது வாசிப்புக்காகச் சமர்ப்பித்தார்.

அப்போது ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பிய திரு. அமிர்தலிங்கம் கூறியதாவது:

"இத்தடைச் சட்ட மூலத்தை எதிர்த்து இரண்டு முன்னாள் எம். பி.க்கள் உட்படப் பலர், உயர் நீதிமன்றத்தில் இரண்டு மனுக்களைத் தாக்கல் செய்து, அம்மனுமீது விளக்கம் அளிக்க ஆணையாளர்களான ஜி. பி. ஏ. சில்வா குணரத்ன ஆகியோர் 6 வார கால அவகாசமும் கேட்டுள்ளனர்.

இந்நிலையில் இச் சட்ட மூலம் மீதான விவாதம் தேசிய அரசுப்பேரவையில் நடைபெற்றால் பேரவை உறுப்பினர்களின் பேச்சுச் சுதந்


(6-ம் பக்கம் பார்க்க)


## நிஹால் வெளிநாடு செல்ல ஜனதிபதி கமிஷன் தடை

### பாஸ்போர்ட்டும் பறிமுதல்

(கொழும்பு)

முன்னைய ஆட்சிக்காலத்தில் நீதியமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய திரு. நிஹால் ஜெயவிக்ரம வெளிநாடுசெல்ல சமர்ப்பித்த விண்ணப்பத்தை ஜனதிபதி விசேட ஆணைக்குழு இன்று காலை நிராகரித்தது.

பிரிட்டனில் பயிற்சி ஒன்றினை மேற்கொள்வதற்கு அனுமதிகோரி திரு.எச்.என். ரி. சில்வா, திரு. ஜெயவிக்ரமவின் விண்ணப்பத்தை ஆணைக்குழு முன் சமர்ப்பித்தார்.

உத்தரவு பிறப்பிக்குமுன் ஆணைக்குழு அரசின் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. ஏ. ஸி. டி. சொய்சாவின் கருத்தையும் கேட்டுக்கொண்டது.

வெளிநாடு செல்வதற்கான விண்ணப்பத்தை நிராகரித்த ஆணைக்குழு திரு. ஜெயவிக்ரமவின் பாஸ்போட்டையும் பறிமுதல் செய்தது. (உ)

## ஆயுள்வேத கல்லூரித் திறப்புவிழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெற இருந்த கைதடி ஆயுர்வேதக்கல்லூரி திறப்பவிழாவும் சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியாவின் வடபகுதி விஜயமும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பரிசுத்த பாப்பரசர் சின்னப்பரின் மறைவையொட்டி தேசிய துக்கதினம் இன்று அனுஷ்டிக்கப்படுவதாலேயே இவை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### 'ருகிங்' செய்தார்களாம்

## யாழ். வளாக மருத்துவபீடம்

### 11 மாணவர்களுக்குத் தடை உத்தரவு! இவர்களில் அறுவர் பெண்கள்!!

(யாழ்ப்பாணம்)

'ருகிங்' செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் மீது, யாழ். வளாக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஆறு மாணவிகளுக்கும், ஐந்து மாணவர்களுக்கும் வளாகத் தலைவர் 'தடை' விதித்துள்ளார்!

கைதடியில் அமைந்துள்ள யாழ். வளாகத்தின் மருத்துவபீடத்தை வளாகத்தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கடந்த வாரம் திறந்துவைத்தார்.

இம்மருத்துவபீடம் ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளன்றே, குறிப்பிட்ட மாணவ, மாணவிகள் சக மாணவ மாணவிகளை ,தலைமயிர் வெட்டுதல் போன்ற துன்புறுத்தல்களைச் செய்து 'ருகிங்' நடத்தினர்களாம்.

இச்சம்பவம்பற்றி உடனடியாக யாழ். வளாகத் தலைவரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து' சம்பந்தப்பட்ட பதினொருபேர்மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வகுப்புகளுக்குச் செல்வதற்கு இம் மாணவ, மாணவிகள் மீது காலவரையறையற்ற 'தடை' உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது!

## பாப்பரசரின் பூதவுடல் இன்று அடக்கம்

வத்திக்கான், ஆக. 11

மறைந்த பரிசுத்த பாப்பரசர் ஆருவது சின்னப்பரின் திருவுடல் சென்பீட்டர்ஸ் தேவாலய வளவில் நாளை சனிக்கிழமை காலை நல்லடக்கம் செய்யப்படும்.

அன்னரின் இறுதிக்கிரிகைகளின்போது நடைபெறும் இரங்கற்பூசையில் 113 கர்தினால்கள் கலந்துகொள்வர்.

உலகநாடுகளிலிருந்து பெருந்


(6-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

யாழ். நகருக்குள் வீட்டோடு அல்லது வீடு கட்டக்கூடிய காணி 2பரப்பு முதல் 10வரை. தொலைபேசி:பண்டத்தரிப்பு20 விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 0009. மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 0009

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை வீட்டுச் சொந்தக்காரர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்குக. விபரங்களுக்கு: விளம்பர இல. 0022, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 0022

எலெக்ட்ரோ பிளேற்றிங்பகுதிக்கு அனுபவமுள்ள பொலிஷர்கள் தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். யாழ் உலோகத்தொழிற்சாலை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0031

## விற்பனைக்கு

தெல்லிப்பழை வறுத்தலைவிளானில் மெயின்ரோட்டிற்கு அண்மையில் தற்போது பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 22 பரப்புக் காணி சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: R. ருத்ரா, 135, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 9991

## வாலிபர் கிறீஸ்தவ சங்கம் யாழ்ப்பாணம்

(Y. M. C. A. Jaffna)

படித்த வேலையற்ற இளைஞர்களிடமிருந்து வெல்டிங், கட்டிட நிர்மாணம் ஆகியவற்றில் யாழ். வாலிபர் கிறீஸ்தவ சங்கத்தின் செலவில் யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்தில்ஒருவருட பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு: 31-08-1978.

காரியதரிசி,
வாலிபர் கிறீஸ்தவசங்கம்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
0011

## வாலிபர் கிறீஸ்தவ சங்கம் யாழ்ப்பாணம்

(Y. M. C. A. Jaffna)

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற வசதியாக ஆங்கில பேச்சு (Spoken-English) பயிற்சியளிக்க மேசன், தச்சுதொழில் செய்வோர், வெல்டேர்ஸ், இரும்பு தொழில் செய்வோர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வகுப்புகள் மாலை நேரங்களில் மட்டும் யாழ்ப்பாணம் வாலிபர் கிறீஸ்தவ சங்கக் கட்டடத்தில் நடாத்தப்படும். விண்ணப்ப முடிவுதிகதி 31-08-1970.

காரியதரிசி
வாலிபர்கிறீஸ்தவசங்கம்
யாழ்ப்பாணம்.
0010

## நன்றி நவிலல்

சபாநாயகம்: எம். கமலா, நிரஞ்சன், சுதர்மன் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் திரு. எம். சபாநாயகம் அவர்களின் மரணச் சடங்குகளில் நேரில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் ஆறுதல் நல்கிய அனைவருக்கும் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றனர். தனித்தனி நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றனர். PMB 5373, பொடியா எஸ்டேட், இபடர்ன், நைஜீரியா. 0029

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M. B 13765

1 T. W. அருள்நாயகம் கைம்பெண் நாகம்மா, 2 அருள் நாயகம் குமாரசிங்கம், 3 அருள்நாயகம் தெய்வேந்திரன், 4 அருள்நாயகம் நாகேந்திரன், 5 அருள்நாயகத்தின் மகள் தேவராணி, 6 அருள் நாயகத்தின் மகள் தேவரதி, 7 அருள்நாயகம் வேவசீலன் 8 அருள்நாயகம் தேவபாலன் 5 லிருந்து 8 வரை பிராய மற்றவர்கள் இவர்கள் சார்பாக முதலாம் வழக்காளி அனைவரும் நுணுவில் மேற்கு வழக்காளிகள் எதிராக 1 சுப்பிரமணியம் பாலகிருஷ்ணனும் 2 பெண் மனோன்மணி இருவரும் 149/A அரசடிரோட் கந்தர்மடம் எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 13765 இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 30 உ புதன் கிழமை 30-8-78 மு. ப. 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும். தீர்வை முதலாம் இரண்டாம் மூன்றும், நாலாம் வழக்காளிகளுக்கும் 5,6,7, 8 பிராயமற்ற வழக்காளிகளுக்கு முதலாம் வழக்காளி மூலமாகவும் தீர்த்த தீர்வைத்தொகை ரூபா 5880/-மேலும் 18-4-73 தொடக்கம் 5-7-74 வரை ரூபா 4000/-க்கு 14 வீதவட்டியும் பின் முழுத் தொகையும் இறுபடும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு 692ரூபா 25 சதம் இதில் ரூபா 3000/- கொடுக்கப்பட்டது. என்னும் கோட்டுச் செலவுரூபா361/50.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை வடகிழக்கு 'அம்மைக் கோயில்'' வெளி ப.நி. 2ம் குழி 11½யும் புதிதாகக் கட்டப்பட்ட வீடும், பயிர்வகைளும், கிணறும். இதற்கு எல்லை கிழக்கு நடராசாவின் மகள் ராசெல்வரிக்கும் பங்காளிக்கும் உரிய ஆதனம், வடக்கு செல்லையா பெண் தங்கத்துக்குரிய ஆதனம், மேற்கு ஒழுங்கையும் சுப்பிரமணியம் பெண் கதிராசிப்பிள்ளைக்குரிய ஆதனம், தெற்கு சுப்பிரமணியம் பெண் கதிராசிப் பிள்ளைக்கும் சரவணமுத்து கிருஷ்ணசாமிக்கும் பெண் பாக்கியலட்சுமிக்கும் உரிய ஆதனம் தெற்கெல்லைக் காணிக்கு கிழக்கெல்லை ஓரமாக 5 அடி அகலமுள்ள பாதையால் தெற்கில் இருக்கும் ரோட்டுக்குப் போக உருத்தும் தெற்கெல்லைக் காணிக்கு கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்பு உருத்தும் புறநீங்கல் பதிவு இல D 259/2[illegible]

சி.செ.மாரிமுத்து,
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

விதானைவளவு,
சித்தன்கேணி,
3-7-78 0024

பரீட்சையில் ஆள்மாறாட்டம்:

# மாணவர்மீது 28-ம் திகதி தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் நடைபெற்ற ஆள்மாறாட்டத்தைத் தொடர்ந்து பொலிஸார் தாக்கல் செய்த ஒரு வழக்கில் முதலாம் எதிரிமீதான தீர்ப்பு இம்மாதம் 28ம் திகதி வழங்கப்படும்

1976ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி வடபகுதியின் ஒரு பரீட்சை நிலையமான நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில்நடைபெற்ற ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சையின்போது. திருநெல்வேலியைச் சேர்ந்த செல்லத்துரை மகேந்திரநாதன் என்ற பரீட்சார்த்திக்காக கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சபாபதி துரைரத்தினம் என்பவர் ஆள்மாறாட்டம் செய்து பரீட்சை எழுதியதாக பொலிஸார் குற்றம் சுமத்தி வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

விசாரணையின்போது, இரண்டாம் எதிரி செல்லத்துரை மகேந் திரநாதன்மீது தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக போதிய சாட்சியங்கள் இல்லை என்று கூறி யாழ். நீதவான் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

முதலாம் எதிரி சபாபதி துரைரத்தினம் மீதான தீர்ப்பு இம்மாதம் 28ம் திகதி வழங்கப்படுமென்றும் தெரிவித்த நீதிபதி, இவரது கைரேகை அடையாளங்களைப் பதிவுசெய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## கைத்தறி நெசவாளர்க்கோர் நற்செய்தி

கடந்த 10 வருடமாக உங்கள் நம்பிக்கையையும், அபிமானத்தையும் பெற்ற எம்மால் 'பிரான்ஸ்' தேசத்திலிருந்து தருவிக்கப்பட்ட 'சொலேந்திரன்' கெட்டிச்சாயம் நவீன முறையில், நூல் சிக்கில்லாது கண்கவர் கலர்களில் செய்து தரப்படும்.

1 இறுத்தல் சாயமூட்ட ரூ 7/50.

1 இறுத்தல் சலவையிட ரூ.2/25.

சி.நவரத்தினம்.
''கைத்தறி மாளிகை,''
டச்சு வீதி,
சாவகச்சேரி.
0018

## நடைமுறை வணிகம்

நடைமுறை வணிகப் பதிப்புரிமை விற்பனைக்குரியது. 25-8-78க்குள் கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

ந. ஞானேந்திரன்,
107, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

0030

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M B 14290

1. முருகர் காசிப்பிள்ளையும் பெண்
2. இராசம்மாவும் இருவரும்
விளானை, காரைநகர் கிழக்கு, காரைநகர்.

வழக்காளி

எதிராக

1. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியமும்
2. பெண் சிவபாக்கியமும் இருவரும்
விளானை, காரைநகர் கிழக்கு.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B/14290-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1978-ம் ஆண்டு ஆவணி மாதம் 16-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 4235/ம் 28-2-74 தொடக்கம் 5-9-74 வரைக்கும் ரூபா 3000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 500/-ம்இம்முழுத்தொகையிலும் ரூபா 1500/- கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கு இறை சோதியாண்ட தோட்டம் நி. பர. 8 ஆட்சியின்படி நி. பர. 10 (பத்து) வீடுகள் பனைகள் வடலிகளும் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு கணபதிப்பிள்ளை கந்தையாவுக்கும் கணபதிப்பிள்ளை கைம்பெண் நாகம்மாவுக்குமுரிய ஆதனங்கள் மேற்கு அம்பலவாணர் இரத்தினத்திற்கும் உறுதி கொடுப்பவரின் 1-ம் பேருக்கும் உரிய ஆதனங்கள் தெற்கு அம்பலவாணர் இரத்தினத்தின் ஆதனம் இதடங்கலும்.

சி. சோ. நரசிங்கம் ஜே. பி.
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்

தொல்புரம்
5-6-78. 0019

## புதுக்குடியிருப்பு கிராமசபையின் கேள்வி விளம்பரம்

புதுக்குடியிருப்பு கிராமசபையின் மாடு வெட்டும் மடுவ வளவினுள் ஓர் புதிய கிணறு வெட்டிக்கட்டுதல் என்னும் வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் புதுக்குடியிருப்பு கிராம சபையின் விசேட ஆணையாளரால் 1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ந் திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் விசேட ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். அதன் பிரதி அதே நேரத்தில் கிடைக்கக்கூடியதாக வவனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கட்கு அனுப்பப்படவேண்டும்.

3. கேள்விப்பிணையாக ரூபா 75-00ம் பத்திரப்பணமாக ரூபா 10-00ம் 22-8-78ந் திகதி பிற்பகல் 4-00 மணிரை கட்டியதன் பேரால் கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

4. கேள்விகள் ஏற்கப்பட்டதென அறிவிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் பிணைப்பணத்தைக்கட்டி ஒப்பந்தம் எழுதுவதுடன் மூன்று மாதங்களுக்குள் வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளித்தல் வேண்டும்.

5. மேலதிகமானவிபரங்கள் யாவும் கிராமச்சபைக் கந்தோரில் காரியாலய நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

வை. நீலகண்டன்
விசேட ஆணையாளர்
கிராமப்பிரதேசம்,
புதுக்குடியிருப்பு.
10-8-78 . 0025

## தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம் கைதடி

## லொறிச்சாரதி பதவி வெற்றிடம்

பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப்பிரஜைகளிடமிருந்து மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்;

1. கனிஷ்ட தராதரப்பத்திரம் அல்லது 8ம்வகுப்பு சித்தி.
2. வயது: 30 தொடக்கம் 45 வரை.
3. குறைந்தது ஐந்து வருடங்கள் கனரக வாகனங்கள் செலுத்திய அனுபவம்.
4. நல்லொழுக்கமும், திடகாத்திரமுடையவராகவும் இருப்பவர்.
5. பிணை: உரொக்கம் ரூபா 1000/-
ஆதனம்: ரூபா 3000/-

விண்ணப்பங்கள் யாவும் 31-8-78ற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''பொது முகாமையாளர், தென்மராட்சி மேற்கு ப.நோ. கூ. சங்கம், கைதடி'' என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

தபால்உறையின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின்பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் கல்வித்தகைமை, அனுபவம், பிறப்புச் சாட்சிப்பத்திரம், மூன்றுமாதத்திற்குள் பெற்றுள்ள இரு நற்சாட்சிப் பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
11-08-1978. 0027

## மன்றம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் மன்றமொன்று, இன்று மாலை பரந்தனிலுள்ள இரசாயனத் தொழிற்சாலை விடுதியில் அமைக்கப்படவுள்ளது. இதில் கலந்துகொள்ளுமாறு மன்றத்தின் அமைப்பாளரான திரு. கா. யோகராஜா சகல கட்சிப்பிரமுகர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். (கெ)

ஈழநாடு
The Eelanaadu

## கைதடியில் ஒரு வைத்தியசாலை

கைதடியில் அமைக்கப் பட்டுள்ள ஆயுர்வேத வைத் தியசாலை விரைவில் திறந்து வைக்கப்படுகிறது.

ஐக்கியதேசியக் கட்சியின் அரசாங்கத்தின் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு இப்போது அதே அரசாங் கத்தின் காலத்தில் இந்த வைத்தியசாலை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

வடபகுதியில் நூற்றிஐம் பதுபடுக்கைகளைக்கொண்ட ஆயுர்வேத வைத்தியசாலை யொன்று இப்போதுதான் உருவாக்கப்பட்டிருக்கிறது.

வடபகுதியில் புகழ்பெற்ற பல சித்த வைத்தியர்கள் இருந்திருக்கிறார்கள். தீராத நோய் என்று மேல் நாட்டு வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோய்களை யும் இவர்கள் குணப்படுத்தி யிருக்கிறார்கள். இன்றும் அந்தப் பரம்பரையில் வந்த வர்கள், குருகுலக்கல்வியாக அவர்களிடம் படித்துப் பயிற்சிபெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களில் பலர் சித்தவைத்தியத்தில் டமும் பெற்றுத் தொழில் செய்கின்றனர்.

வைத்தியசாலை என்று அதிக படுக்கைகளுடன் பல வைத்தியர்களுடனும் உதவியாளர்களுனும் இது வரை இல்லாதபோதிலும் இப்பகுதியிலுள்ள பல வைத்தியர்களின் வீடுகளில் இன்றும் நோயாளர்சென்று தங்கியிருந்து சிகிச்சை பெறுவதைக் காணலாம்.

கைதடியில் திறந்துவைக் கப்படவிருக்கும் ஆயுர்வேத வைத்தியசாலை இப்பகுதியி லுள்ள சித்தவைத்தியர் களின் ஆராய்ச்சியையும் ஆலோசனைகளையும் பெறு வதற்கான வழிவகைகளை யும்மேற்கொள்வதுநல்லபய னைத் தருமென்று எதிர் பார்க்கலாம்.

பழைய வாகடங்கள் பல இன்னும் வெளிவராமல் பதுக்கி வைக்கப்பட்டிருப்ப தாகப் பலரும் பல தடவை களிலும் எடுத்துக் காட்டி வந்திருக்கின்றனர்.

இப்பொழுது காலத்துக் கேற்றமாதிரிப் புதுப்புது நோய்களும் தோன்றி வரு கின்றன. இதற்கேற்பசித்த வைத்தியர்களும் ஆயுர் வேத வைத்தியர்களும் புதியபுதிய ஆராய்ச்சிகள் மேற்கொண்டுபுதிய மருந் துகளைக் கண்டுபிடித்து வரு கின்றனர்.

கைதடி ஆயுர்வேத வைத் தியசாலையும் புதிய ஆராய்ச் சிகளையும் பயன்படுத்த வேண்டியது அவசியம்.

கைதடி ஆயுர்வேத வைத் தியசாலையில் பணியாற்று வதற்கு பட்டம்பெற்ற சித்த, ஆயுர்வேத வைத்தி யர்கள் நியமிக்கப்படுவார் கள். அவர்கள் ஆற்றலுள் ளவர்களாக இருப்பார்கள்.

ஆயினும் பட்டம்பெற்றி ராத பரம்பரை வைத்தியர் களினது ஆற்றலையும் அனு பவத்தையும் கைதடி ஆயுர் வேத வைத்தியசாலை பயன் படுத்த முன்வருவது வைத் தியசாலை முன்னேற்ற மடைவதற்குப் பெரிதும் உதவும்.

இதற்கென இப்பகுதிப் பரம்பரை வைத்தியர்கள், மருந்துகளில் புதிய ஆராய்ச்சி செய்பவர்கள், மருந்து உற்பத்தி செய்பவர்கள் ஆகியோரைக் கொண்ட 'ஆலோசனைச்சபை' யொன்றை அமைப்பதும் பயனுள்ளதாக இருக்கும் என்பது நமது கருத்து.

# விவாதிக்கப்படாத 'தமிழ்ஈழ' தனியார் பிரேரணை

## பேரவையில் 'அமிர்' நிகழ்த்திய உரை

(நேற்றைய தொடர்ச்சி)

இரண்டு வருடங்களுக்கு மேலாக தேர்தல் ஒத்திவைக் கப்பட்டிருந்தது. கடைசியாக 1975ம் ஆண்டில் தேர்தல் நடந்தபோது, இன்று நான் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கு வாய்ப்புப் பெற்றிருக்கின்ற காங்கேசன்துறைத் தொகுதி வாக்காளர்கள் சந்தேகத்துக் கிடமின்றித் தங்கள் தீர்ப்பை அளித்தனர். அவர்கள் அளித்த தீர்ப்பு என்ன? எழுபத்தைந்து வீதத்துக்கும் அதிகமான வாக்குகளால் திரு. செல்வ நாயகத்தைத் தெரிவுசெய்த னர். இதன்மூலம் அவர்கள் அரசியலமைப்பை நிராகரித் தது மட்டுமன்றி தேர்தலில் வெற்றிபெற்றவுடன் திரு. செல்வநாயகம் எதைச் சொன் ஞரோ அதையே வலியுறுத்தியு மிருந்தனர். திரு. செல்வநாய கம் சொன்னார், 'தமிழ் மக் களிடம் ஏற்கனவே ஒப்படைக் கப்பட்டுள்ள சுயநிர்ணய உரி மையை தமிழ் ஈழத்தேசச் செயல்படுத்தி விடுதலைபெற வேண்டுமென்பதற்காகக் கொடுக்கப்பட்ட கட்டளையா கவே இத்தேர்தல் முடிவை நான் கருதுகிறேன்' உண்மை யில் அந்தத் தேர்தல் தீர்ப்பு இன்று அநேகமாக நூறுவீத மாகிவிட்டது. ஏனெனில் அந் தப் பிரச்னையில், திரு. செல்வ நாயகத்துடன் போட்டியிடு வதற்கு அன்றைய அரசு சம் மதிக்கச் செய்யக்கூடியதாக இருந்த ஒரேயொருவேட்பாள ரான கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. வி. பொன்னம் பலமும் இப்போது அதை விட்டு தமிழ்மக்களின் விடு தலைப் போராட்டத்தில் தமி ழர் விடுதலைக் கூட்டணியுடன் கைகோர்த்து நிற்கிறார்.

**திரு. லலித் அத்துலத் முதலி** (வர்த்தக அமைச்சர்)

அவர் கம்யூனிஸ்ட் கட்சியி லிருந்து விலகிவிட்டாரா?

திரு அமிர்தலிங்கம்:- ஆம். அவர் கம்யூனிஸ்ட் கட்சியி லிருந்து விலகிவிட்டார்.

தமிழ்மக்கள் கொடுத்த இந் தக் கட்டளையின் மீது நட வடிக்கை எடுத்த அன்றைய பாராளுமன்றத்திலிருந்த தமி ழர் விடுதலைக் கூட்டணியின் பேரவை உறுப்பினர்கள் தனி யார் பிரேரணையொன்றுக்கு முன்னறிவித்தல் கொடுத்தனர் ஆச்சரியமான ஒருசந்தர்ப்பம் என்னவென்றால் அந்தப்பிரே ரணையின் முன்னறிவித்தல் 1976ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ந் தேதிய ஒழுங்குப் பத்திரத்தில் வெளிவந்திருந்த தாகும்.

திரு. எஸ். ஜே. வி. செல்வ நாயகம், திரு. வி. தர்மலிங் கம், திரு. ஏ. தங்கத்துரை, திரு. எக்ஸ். எம் செல்லத் தம்பு, திரு, பி. நேமிநாதன், திரு. எஸ். கதிர வேலுப்பிள்ளை, திரு. வி. என். நவரத்தினம், திரு. கே. ஜெயக்கொடி, திரு. கே. துரைரத்தினம், திரு. கே. பி. இரத்தினம், திரு. வி. ஆனந்தசங்கரி ஆகியோர் முன்னறிவித்தல் கொடுத்த பிரேரணை இதுதான்:-

இலங்கையிலுள்ள சிங்கள வர்களும் தமிழர்களும் அவர் களுக்கு இயல்பாகவே உள்ள சுயநிர்ணய உரிமையுடன் கூடிய இரண்டு தனித்தனி இனங்களாக இருப்பதாலும்.

சிங்கள இனமும் தமிழ்இன மும் அந்நிய ஆட்சியினால் ஒன் ருகப் பிணைக்கப்பட்டு இன்று வரையும் பிணைக்கப்பட டிருப் பதனாலும்.

சுதந்திர இலங்கையின் அர சாங்கங்கள் அனைத்தும் சிங் கள இனத்தின் ஆக்கிரமிப்புத் தேசிய வாதத்துக்கு ஊக்க மளித்து வளர்த்து அதன் விளை வாக தமிழ்மக்களை ஆளப் படும் இனம் என்ற நிலைக்கு தள்ளும் இன்றைய அரசிய லமைப்பை ஒருதலைப்பட்சமா கத்திணித்துள்ளதாலும் இந் தப் பேரவை காங்கேசன்துறை இடைத்தேர்தல் தீர்ப்பை, சுதந்திரமான சுயநிர்ணய முள்ள, மதச்சார்பற்ற தமிழ் ஈழ அரசைப் புனரமைத்து உருவாக்குவதற்குக் கொடுக்கப் பட்ட கட்டளையாக அங்கீகரிப் பதென்று தீர்மானிக்கிறது''

இந்தப் பிரேரணைக்கான அறிவித்தல் 1976ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் கொடுக் கப்பட்டது. ஆனால் அந்தப் பிரேரணை எடுக்கப்படவே யில்லை. வேறொரு தனியார் பிரேரணை இதற்கு முன்இருந் தது. அதற்குப்பின் கொடுத்த இந்தப் பிரேரணை அந்தப் பாராளுமன்றம் கலைக்கப்படும் வரை, அந்தப் பாராளுமன்றத் தின் பதவிக்காலம் முடிவடை யும்வரை வேறு தனியார் பிரே ரணை எதுவும் விவாதத்துக்கு எடுத்துக் எடுத்துக்கொள்ளாத படி, அந்தத் தனியார் பிரே ரணை மீதான விவாதத்தை அரசாங்கம் நீடித்துவந்தது.

**ஒரு அங்கத்தவர்:**

ஜனநாயகம்?

திரு அமிர்தலிங்கம் தொடர் ந்து கூறியதாவது:

இதன்பின் வட்டுக்கோட்டை யில் எனது சொந்தக் கிராம மான பண்ணுகத்தில் எங்கள் வருடாந்த மகாநாட்டில் நாங் கள் சந்தித்து சரித்திரமுக்கி யத்துவம் வாய்ந்த தீர்மா னத்தை நிறைவேற்றினோம். அத்தீர்மானம்தான் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையாகவும் அமைந் தது.

எமது சகோதரர்களுடன் இனியும் இணைந்துவாழமுடியா தென்ற நிலைக்கு நாம் தள்ளப் பட்டதற்கான பல்வேறு கார ணங்களையும் நாங்கள் அந்தத் தீர்மானத்தில் எடுத்துக்காட்டி யிருந்தோம். இந்த சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த சந் தர்ப்பத்திலே அந்தத் தீர்மா னத்தை இந்தச் சபையின்முன் வைப்பது பொருத்தமென்று நான் நினைக்கிறேன்.

## இன்றைய இராசிப்பலன்

ஆடிமாதம் 27-ந் திகதி
சனிக்கிழமை
(12-8-78)

**மேடம்:-** ஏமாற்றலின் தாக்குதலால் அவதிப்படுவீர் கள். தொழில் புரியும் இடத் தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறுபிணிக்கு இடமுண்டு பொறுமைநன்று.

**இடபம்:-** பிறந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணை வர். குடும்பப் பிரச்னைகளில் சுமுகமானநிலை தென்படும். இன்று பொன்னான நாள்.

**மிதுனம்:-** அன்னியர் சவ காசமும் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும். சிறிய விட யத்திற்குக்கூட அதிக ஆத்தி ரப்படுவீர்கள். அடக்கம் வேண்டும்.

**கடகம்:-** இதயத்திற்கு இதம் தரும் செய்தியொன்று கிடைக் கலாம், புண்ணியகருமங்களில் விருப்பம் ஏற்படும். செலவு கள் கூடுதலாக இருக்கும்.

**சிங்கம்:-** உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையுக்கிடை க்கும். உற்சாகமாகக் கடமை யாற்றுவீர்கள். உவகை சேரும்.

**கன்னி:-** இளமை நினைவு கள் நிழலாட்டம் போடும். வேண்டிய அளவிற்கு வெள் ளிப்பணம் துள்ளும். நீண்ட நாள் கனவு இன்று நனவாக லாம்,

**துலாம்:-** அற்பவிடயத்திற் கும்ஆத்திரப்படுவீர்கள்நெருங் கிய நண்பர் ஒருவரைப் பகை த்துக் கொள்ள நேரிடலாம். அடக்கம் வேண்டும்.

**விருச்சிகம்:-** இடர்கள் பலதாக்கும். இதயத்தில் எரி மலை குமுறும். உதவி செய் யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரி டும்.

**தனுசு:** திடீர் திருப்பம் வாழ்க்கையை வளப்படுத்தும். சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டகர மாக அமையும்.

**மகரம்:-** வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தர லாம். வேண்டாத உறவுக ளைத் துண்டித்தல் நன்று நிதா னம் வேண்டும்.

**கும்பம்:-** இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்கு புதியவாக னத்தில் முதலீடு செய்யவும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

**மீனம்:-** மகிழ்ச்சிகரமான தினம். நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர் கள். கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக் கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

### மணிவாக்கு

மனிதர்கள் அன்பு நிறைந்தவர்களாக இருக்கும்வரை தர்மம் இருந்தே தீரும்.

— பகவான்
ஸ்ரீ சத்தியசாயிபாபா

மட்டக்களப்பு

# இந்துமகளிர்மன்ற பொன்விழா

## பயனுள்ளவகையில் நடத்த ஏற்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இந்து மக ளிர்மன்றப் பொன்விழாவை மிகப் பயனுள்ள முறையில் சிறப்புற நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பொன் விழா சம்பந்த மாக இந்து மகளிர் மன்றச் செயலாளர் திருமதி கங்கேஸ் வரி கந்தையா விடுத்துள்ள செய்தியில் தெரிவித்திருப்பதா வது:—

''1929-ம் ஆண்டு, ஸ்ரீராம கிருஷ்ண சங்கத்து முதுபெருந் துறவியான உயர்திரு அவிஞ ஷாநந்த அடிகளாரால் ஆரம் பித்துவைக்கப் பெற்ற, அப் பெருமகனாரின் ஆசீர்வாதத்தி னால் நல்வளர்ச்சி பெற்று தனது 50-வது ஆண்டு நிறை வினை எய்துள்ள இந்து மகளிர் மன்றம், தனக்கு நிலையான கட்டிடம் ஒன்றையும் அமைத் துக்கொண்டுள்ளது. இம்மண் டபத்தில் பல பயிற்சி வகுப்பு கள், விழாக்கள் நடைபெற்று வருவதுடன் இப்பொன் விழா நினைவாக மனையியற் கூட மொன்றை அமைக்கவும், விழா மலர் ஒன்றினை வெளி யிடவும், விழாவைச் சிறப்புற நடத்தவும் ஏற்பாடுகள் செய் யப்பட்டுவருகின்றன. இப் புனித சேவைகளுக்கு நல்லன் பர்களிடமிருந்து பெரும் பொருளுதவிகளை மன்றம் எதிர்பார்க்கிறது'' என்று தமது செய்தியில் மன்றச் செய லாளர் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

## ரம்லான் சிந்தனைகள்

''நோன்பு நோற்கும் ஆடவருக்கும் பெண்க ளுக்கும் மன்னிப்பை யும் மகத்தான நற்கூலி யையும் சித்தப்படுத்தி வைத்துள்ளேன்''

அல்குர் ஆன்:- அல்அஹ் ஜாப் அத்தியாயம்
தொகுப்பு:
A. C. M. மஸ்ஹூர்



## பெருவாழ்வு நல்குவாயே

வேலேந்தி வருகின்ற கந்த வேளே!
விண்ணவர்கள் சிறைமீட்ட வெற்றிவீரா!
பாலேந்தி அபிடேகம் புரிய வந்தோம்
பண்பாரும் நல்லைநகர் குடிகொள்தேவா!
நூலேந்து பிரமாவின் சிரம்குலுங்க
நோகஅவனைக்குட்டிச் சிறையும் வைத்தாய்
மாலேந்து நெஞ்சினிருள் அகற்றிநல்ல
மருவுபெரு வாழ்வெமக்கு நல்குவாயே?

சூரபன்மன் எனுமவுணன் தனையழிக்கத்
துணிபுடனே வாரியிடை மறைவான்றன்னை
கூருடைய வேல்வாங்கி அவன்தன்மேனி
குலவுமிரு கூறாக்கி நின்ற போது
நேருடனே வருமயிலின் மீதிலேறி
நிமிர் சேவல் தனையுமே கொடியேயாக்கி
ஏருடனே வருமெங்கள் நல்லூர்க்கந்தா!
எங்கள்வினை தீர்த்தருள வருகுவாயே!

(நீர்வேலி பண்டிதர் நீ. சி. முருகேசு)

## தேசாய் மகன் மீதான புகார் விசாரணை:

# உத்தியோகபூர்வ குழு நியமனப் பிரேரணை: மேல்சபை ஏற்றது

புதுடில்லி, ஆக. 11

பாரதப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் மகனை காந்திபாய் தேசாய் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை செய்ய உத்தியோகபூர்வகுழு நியமிக்கக் கோரும் பிரேரணையை மேல்சபை ஏற்றுள்ளது.

பிரதமரான தமது தந்தையின் பதவியைப் பயன்படுத்தி பல ஊழல்களைப் புரிந்ததாக 32 குற்றச்சாட்டுகளின் பேரில் திரு. காந்திபாய் பற்றி விசாரணை செய்ய எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி மேல்சபையில் உத்தியோகபூர்வகுழு நியமிக்கப் படவேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்திப் பிரேரணை ஒன்றினைக் கொண்டுவந்திருந்தது.

இப்பிரேரணை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. என். பி. சல்வேயினால் கொண்டு வரப்பட்டது.

இப்பிரேரணையைச் சபை ஏற்றது. 15 உறுப்பினர்கள் கொண்ட குழு நியமிக்கப் படவேண்டுமென்ற திருத்த ஆலோசனையும் ஏற்கப்பட்டது.

### சரண்சிங் சொன்னது

இது இவ்வாறிருக்க, பிரதமரின் கோரிக்கையை ஏற்று முன்னாள் உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் பதவி விலகியபோது திரு. காந்திபாய் மீதான ஊழல் குற்றச்சாட்டைப் பற்றித் தாம் விசாரணை செய்யக்கோரியதால் பிரதமர் திரு. தேசாய் தம் மீது மனத்தாங்கல் கொண்டிருந்தாரென குற்றம் சுமத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேசாய் கருத்து

மேல்சபையில் காங்கிரஸ் கட்சியின் இப்பிரேரணை தறித்து பிரதமர் திரு. தேசாய் பின்னர் கருத்து வெளியிடுகையில் ''வருமான வரிப்பாக்கி சம்பந்தமான 'பைல்'களை தமது மகன் மறைத்துவைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டு என்பனவெல்லாம முற்றிலும் ஆதாரமற்றவை'' என்றார்.

ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தபோதுகூட அவர் மீது மாசு கற்பிக்க முயற்சி நடந்ததென்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

## ''விழுப்புரம் சாதிக்கலவரம்

# தாக்குதலாலே மரணங்கள் சம்பவித்துள்ளன''

### விசாரணைக் கமிஷன் முன் டாக்டர்கள் சாட்சியம்

விழுப்புரம், ஆக. 11

ஹரிஜனர்களுக்கும், ஜாதி இந்துக்களுக்கும் இடையே விழுப்புரத்தில் நடைபெற்ற கலவரத்தில் இறந்தோரது உடல்களைப்பிரேதபரிசோதனை செய்த டாக்டர்கள் இம் மரணங்கள் தாக்குதலாலேயே சம்பவித்துள்ளன என்று தெரிவித்துள்ளனர்.

இக்கலவரம் குறித்து விசாரணை செய்ய தமிழகஅரசினால் நியமிக்கப்பட்டுள்ள சதாசிவம் விசாரணைக்கமிஷன் தனது விசாரணைகளை நேற்று ஆரம்பித்தபோது சாட்சியமளித்த டாக்டர்கள் இதனைத்தெரிவித்தனர்.

இவ்விசாரணையில் சாட்சியமளித்த இரு கிராம அதிகாரிகளும், இரு அச்கௌண்டன்களும் இக்கலவரத்தில் தீவைப்பு நடந்தது, தாக்குதலால் மரணங்கள் நிகழ்ந்தது குறித்துத் தமக்கு எதுவும்தெரியாது என்று கூறினர்.

விசாரணைக்கமிஷன் விசாரணை இம்மாதம் 23ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (உ)

## ஜாப்-சீனு சமரச உடன்பாடு?

பீக்கிங், ஆக. 11

ஜப்பானும் சீனுவும் நட்பு ரீதியிலான சமரச உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொள்ள இணக்கம் தெரிவித்துள்ளன.

இத்தகவலை பீக்கிங் செய்தி ஸ்தாபனம் வெளியிட்டது.

இந்த உடன்படிக்கை இம் வாத இறுதிக்குள் கைச்சாத்தாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

உரும்பராய்ஊரெழுவில்

## காசநோய்த் தடுப்பு மருந்து

(கோப்பாய்)

இலங்கைத் தேசிய கயரோகத் தடுப்புச் சபையின் கோப்பாய்க் கிளையினர், சுகாதாரப் பகுதியினருடைய ஒத்துழைப்புடன் உரும்பராய் பட்டின சபை எல்லைக்குள் காசநோய்த் தடை மருந்து (பீ. சீ. ஜீ.) இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை பாய்ச்சப்படும்

இதற்கென 8 மத்திய நிலைங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

19 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் அனைவரும் சென்று தடை மருந்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வியக்கத்தை சிறப்பாக நடத்த பட்டினசபை எல்லைக்குட்பட்ட தொண்டர்கள் சேவை வேண்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஆஸ்பத்திரிக்கு குடிநீர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையின் குடிநீர் விநியோகத் திட்டத்திற்காக 25 ஆயிரம் ரூபாவை வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கியுள்ளார்.

## ஜெனிவா பயணம்

புதுடில்லி, ஆக. 11

மத்திய அமைச்சர் திரு. சமரேந்திரகுண்டு ஜெனிவாவில் நடைபெறும் மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளும் பொருட்டு நேற்று புதுடில்லியிலிருந்து ஜெனிவா பயணமானார். (உ)

......

## நம்பிக்கைமோசடி செய்தாராம்!

சென்னை, ஆக. 11

வெளிநாடுகளில் வேலைபெற்றுத் தருவதாகக்கூறி பல இளைஞர்களிடம் மோசடி செய்ததாகக் கூறப்படும் நபர் ஒருவரைச் சென்னைப் பொலிசார் கைதுசெய்து அவர் மிது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்நபரிடமிருந்து 154 பாஸ் போட்டுகள், 1500ரூபாபணம் மற்றும் தஸ்தாவேஜுகளையும் பொலிசார் கைப்பற்றினர்.

இவர் வெளிநாடுகளில் வேலைபெற்றுத்தருவதாக கூறி பல இளைஞர்களை மோசடி செய்துள்ளார் என பொலிசார் தெரிவித்தனர். (உ)

## பாக். தூதராக தமிழர்!

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதராக திரு. ஏ. பி. மூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். (உ)

## யோகிகளின் வடஇந்திய பயணம்

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீன யோகாசனக் கலாநிதி ஸ்ரீசிதானந்தயோகி ஞானதீட்சை பெறும் பொருட்டு இந்தியா செல்லவிருக்கிறார்.

இமாலயச் சாரலிலுள்ள சிவானந்தர் ஆச்சிரமத்தில் இருக்கும் யோகிகளிடம் ஆசியும் விசேட ஆலோசனையும் பெறுவார். இவர் பெங்களூரில் உள்ள யோகிகளையும் சந்திக்கஉள்ளார். யோகிகளுடன் மாணுக்கன் ரவீந்திரனும் மாணுக்கி லோகநாயகியும் பெல்ஜியம் மாணுக்கி ஜெனியும் செல்லவுள்ளனர்.

இலங்கை கல்வித்திணைக்களம் யோகாசனத்தை ஒரு பாடமாகக்கற்பிக்க ஏற்பாடு செய்திருப்பது தெரிந்ததே இந்தப்பயிற்சிகளுக்கு மேலும் அதிக சிறப்பாகச் செய்வதற்கு இந்தப்பிரயாணம் உதவியாக இருக்கும் என்று ஸ்ரீ. சிவானந்தயோகி நம்புகிறார்.

## ஆசிரியர்களுக்குக் கட்டுரைப்போட்டி

சென்னை, ஆக. 11

தமிழ்நாடு பெற்றோர், ஆசிரியர் கழகம் ஆசிரியர்களுக்கான கட்டுரைப்போட்டி ஒன்றினை நடாத்துகிறது. (உ)

## மாணவர் - பொலிசார் மோதல்: 17 பேர் காயம்

சென்னை, ஆக. 11

புதுக்கோட்டையிலுள்ளஒரு கல்லூரி மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் 7 மாணவர்களும், 10 பொலிசாரும் காயமடைந்தனர். இம்மோதலின் எதிரொலியாக மேற்படி கல்லூரி மூடப்பட்டது.

இம்மோதல் சம்பவம் தொடர்பாக பொலிசார் 11 மாணவர்களைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர். (உ)

## அங்கவீனர் புனர்வாழ்வுச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

அங்கவீனர்கள் புனர்வாழ்வுச் சங்கமொன்று யாழ்ப்பாணத்தில் நாளை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

யாழ். சோமசுந்தரம் அவனியூவிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் திரு. கு. நேசையாவின் இல்லத்தில் அவரது தலைமையில் இவ் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை நடைபெறுமென்றும் சகல அங்கவீனர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறும் சங்க அமைப்பாளர் திரு. அ. குணசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## 'எங்கள் காலத்தில் வாழ்ந்து எமக்கு பெருமை தந்தவர்'

### பெரியார் சிவபாதசுந்தரனுருக்கு அஞ்சலி

(சுழிபுரம்)

''குருவைப்பேணும் ஒரு பரம்பரை எம்மிடையே வாழ்ந்து வருவதாலேயே இன்று இங்கு சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் குருபூசை சிறப்பாகநடைபெற்றுள்ளது. சைவம் வளர்க்க வந்தமகான் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாராவர் லண்டனிலுள்ள நூல்வெளியீட்டு நிறுவனம் ஒன்று சிறந்த நூல்களை மட்டுமே வெளியிட்டு வருவது வழக்கம் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் ஆங்கிலத்தில் எழுதிய ஒருநூலை இந்த நிறுவனத்தினர் அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். எங்கள் காலத்தில் வாழ்ந்துஎமக்கு பெருமை தந்த அறிஞர் சிவபாதசுந்தரனார் எழுதிய நூல்கள் யாவும் நன்கு பயன்படும் வகையில் இளம் சந்ததியினர் உள்ளங்களில் பதியச் செய்யவேண்டும். இவ்வாறு சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் நடைபெற்ற சிவபாதசுத்தரனார் குருபூசை நினைவு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் குறிப்பிட்டார்.

சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழாச்சபையும் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியும் இணைந்து நடாத்திய இவ் விழாவுக்கு கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் தலைமை வகித்வார். கல்லூரி அதிபர் திரு க. அருணசலம் தமது தலைமை உரையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்வழி சென்று சமயப் பணியை நிலைபெறச்செய்தவர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் பணியை நினைவுபடுத்துவதன்மூலம் சமய ஞானத்தை ஊட்டலாம் சைவச்சூழலை வளர்த்து வந்ததுடன் சமயச் கருத்துக்களை வேர் ஊன்றவும் செய்தவர் சிவபாதசுந்தரனார் எங்கள் கல்லூரி நூலகத்தில் சிவபாதசுந்தரனார் எழுதிய நூல்கள் நிறைய இடம்பெற எமக்கு நூற்றாண்டு விழாச்சபையினர் உதவவேண்டும் பெரியாரின் நினைவாக நாம் ஒரு நூலகத்தை விரைவில் இங்கு இங்கு திறக்கவுள்ளோம் என்ற நலல ஓர் செய்தியை அறிவித்து பெருமை கொள்கின்றோம்என்றார்.

பண்டிதர் செ. சிவப்பிரகாசம் பண்டிதை பொன். பாக்கியம் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். வித்துவான் [illegible] நடராசன் அஞ்சற்பா ஓதி[illegible] சைவப் [illegible] நூற்றாண்டு விழாச்சபைச் [illegible] திரு [illegible] கிருஷ்ணபிள்ளை நன்றியுரை கூறினர்.

## வெள்ள நிவாரணம்:

# உ பி பீகாருக்கு ரூ. 4 லட்சம் நிதிஒதுக்கீடு

புதுடில்லி. ஆக. 11

பீகார், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளச்சேத நிவாரணத்தின் பொருட்டு பிரதமர் திரு மொரார்ஜிதேசாய் தமது தேசிய நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாவைஒதுக்கியுள்ளார்.

உத்தரப் பிரதேசத்தில் வெள்ள நிலைமை சீராகவில்லையென்றும் ஹிமாலயப்பிரதேசத்தில் வெள்ளத்திற்கு 9பேர் பலியானதாகவும் பஞ்சாப் மாநிலத்திலும் வெள்ளத்தால் பலர் பாதிப்புற்றுள்ளதாகவும் அறிக்கைகள்தெரிவிக்கின்றன. (உ)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
வி. பி. கணேசன்-சுபாஷினி
நான் உங்கள் தோழன்

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
விஜயகுமார்
கே. ஆர். விஜயா
ஜானகிசபதம்

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - பத்மினி
நடித்த
அரசிளங்குமரி
(புதியபிரதி)

**REGAL** Jaffna
Daily 10-30 a. m., 2-00, 4-30, 7-00, & 9-30 p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
செல்வம்
14-ந் திகதி முதல் பூவும் பொட்டும்

**லிடோ** (யாழ்.நகர்)
போன்: 7692 தினசரி 4 காட்சிகள்
வீர அபிமன்யு

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஆர். ராதா - பத்மினி
ஜெமினி - முத்துராமன்
நடித்த
சித்தி

**சாந்தி** யாழ்நகர். போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45காட்சிகள்
நாதம் கேட்குதடி நல்லூர் நாதன்......
கோபுர ஆலய மணியின் நாதம் கேட்குதடி
3 வது வாரம்
ரகுநாதன்... குமுதினி ...சந்திரகலா... தனரத்தினம்
நடிக்கும்
தெய்வம் தந்த வீடு (சினிமாஸ் கோப்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சோ
சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பெரும் புகழும்


# இலக்கிய கலாநிதிக்கு திங்கள் வரவேற்பு விழா

(யாழ்ப்பாணம்)

கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் பாராட்டு விழா சிறப்புற நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பொதுமக்களால் நடத்தப்படும் இவ்விழாவில் திங்கட்கிழமை பிற்பகல் முதல் நிகழ்ச்சியாக வண்ணை பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை குழுவினரின் மங்கள இசை இடம் பெறும்.

அதனையடுத்து கலாநிதி பண்டிதமணி மண்டப வாயிலில் வரவேற்கப்படுவார். மாலை திரு வி. ரி. வி. சுப்பிரமணியத்தின் தேவாரத்தையடுத்து பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்துவார். தலைமையுரையையடுத்து திரு. த. இராசேந்திரம் மங்கள வாழ்த்திசைப்பார்.

'சிந்தனைக்களஞ்சியம்' நூலை பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் வெளியிட்டு வைப்பார். மருத்துவப் பேராசிரியர் அ. சின்னத்தம்பி முதற் பிரதி பெறுவார்.

பின்னர் ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம், ஆர். என். சிவப்பிரகாசம், ஆ. சபாரத்தினம், ம. ஸ்ரீகாந்தா, பண்டித வித்வான் க. கிருஷ்ணபிள்ளை, இ. மாணிக்கவாசகர், யாழ். நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்துவர்.

பண்டிதமணி பதிலுரை நிகழ்த்துவார்.

இரவு இசையரங்கில் நாதஸ்வரக் கலாநிதி திரு. என். கே. பத்மநாதன் நாதஸ்வரம் வாசிப்பார். (உ)

## இன்று பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழர் ஆசிரிய சங்க பொதுச் செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்தமையைக் கௌரவிக்கும் முகமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்டம் யாழ் கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் இன்று பிற்பகல் 3மணிக்கு பாராட்டு விழா ஒன்றினை நடாத்துகின்றது.

## தங்கப்பதக்கம் பெற்றார்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இளங்கலைஞர் விழாவில், செல்வன் அய்யாக் கண்ணுதேசிகர்ஞானசுந்தரம், வயலின் வாசித்து தங்கப் பதக்கம் பெற்றார். இவர், யாழ். வளாக விஞ்ஞானபீட முதலாவது ஆண்டு மாணவராகும். கடந்தவருடம் மானிப்பாய் இந்துக் கல்லூரி 'ஆல்ரவுண்டர்' வெள்ளிக்கோப்பையையும், சிறந்த 'நடிகை'க்கான வெள்ளிக்கோப்பையையும் பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.


**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
5 TH MERCENARY & FINALWEEK
Peter Fonda,
DIAMOND MERCENARIES
From 14-8-78
NOT NOW COMRADE


# "157 ஷரத்து நீக்கம் அரசின் ஜனநாயகப் போக்கைக் காட்டுகிறது"

-- தொண்டமான்

(கொழும்பு)

"தோட்டத் தொழிலாளருக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையை புதிய அரசியலமைப்பு ஏற்படுத்துகிறது" என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

"புதிய அரசியலமைப்பில் 157வது ஷரத்தை அரசாங்கம் நீக்கியது அதன் ஜனநாயகப் போக்கைக் காட்டுகிறது" என்றும் அவர் சொன்னார்.

## நாளை வெளியீடு

(கொழும்பு)

செவ்வந்தி சஞ்சிகையின் வெளியீட்டுவிழா நாளை மாலை விவேகானந்தசபை மண்டபத்தில் நடைபெறும்.

இரா. சக்கரவர்த்தி கருணாகரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சிறப்புரைகளை திருவாளர்கள் ஈழவேந்தன் எம். நவசோதி காவலூர் எஸ். ஜெகநாதன் லெ. முருகபூபதி ஆகியோர் உட்பட பலர் வழங்குவர்கள். (கெ)


## கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்

**கிளிநொச்சி.**

எமது சங்கத்தில் பின் வரும் பதவிகளுக்கு கீழ் வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் "பொதுமுகாமையாளர், கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி" என்ற விலாசத்திற்கு தபால் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு 26-08-78 பிற்பகல் 2-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும்.

**1. கணக்கு லிகிதர் தரம் 11**

சம்பள அளவுத் திட்டம் 180 — 304 / 6×10, 8×8

தகைமைகள்:

1. கணக்கியல் அல்லது வர்த்தக எண்கணிதம் உட்பட 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரணச்) சித்தி, அல்லது
2. கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர்(சாதாரணதர)தராதரப் பத்திரம், கணக்கியலில் அல்லது எண்கணிதத்தில் அல்லது வர்த்தக எண்கணிதத்தில் திறமைச் சித்தியுடன் கூடியக. பொ. த. ப. (சாதாரணதர) இவையுடைய விண்ணப்பகாரருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது எல்லை — 20 — 35 வரை

**2. பொது லிகிதர் தரம் 11**

சம்பள அளவுத் திட்டம் 200 — 340 / 8×10, 10×6

தகைமைகள்-

1. 6 பாடங்களுடன் கூடிய க. பொ. த. ப. (சாதாரணதர)மும் இரண்டு வருட காலஅனுபவமும் அல்லது
2. க. பொ. தா. ப. (சாதாரணதரம்) 6 பாடங்கள், இவற்றுள் இரண்டு பாடங்கள் வர்த்தகம், வர்த்தக எண்கணிதம் அல்லது பொருளாதார வியலாக இருத்தல் வேண்டும், அல்லது
3. பொதுஎழுதுநர் பதவியின் தரம்111இல் இரண்டு வருட கால அனுபவம்.

வயது எல்லை — 18 —30 வரை

**3. பொது லிகிதர் தரம் 111**

சம்பள அளவுத் திட்டம் 160 — 265 / 5×12, 7.50×6

தகைமைகள்-

1. எண்கணிதத்தில் திறமைச் சித்தியும் 6 பாடங்களில் சித்தியும் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரணதரம்)

வயது எல்லை — 18 — 30 வரை

**4. காசாளர் தரம் 11**

சம்பள அளவுத் திட்டம் 200 — 380 / 8×10, 12·50×8

தகைமைகள்-

1. எண்கணிதத்தில் அல்லது கணக்கியலில் அல்லது வர்த்தக எண்கணிதத்தில் குறைந்தபட்சம் ஒரு திறமைச்சித்தியையேனும் உடைய 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரணதர)ச் சித்தியும் ஒரு வருட கால அனுபவமும்.

வயது எல்லை — 20 — 35 வரை

குறிப்பு:-

மேற்படி சங்கத்தில் பணிவோருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

ஒப்பம்
பொதுமுகாமையாளர்.
கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.

7-8-78. 0026

# "சைவ சமயக்கல்லூரி விரைவில் அமைக்கப்படும்"

## வடமாநில வித்தியாதிபதி தகவல்

(யாழ்ப்பாணம்)

சைவசமயத்தை முறைப்படி போதிக்கக்கூடிய வகையில் அமையும் சைவசமயக் கல்லூரி ஒன்று விரைவில் தமிழ்ப் பகுதி ஒன்றில் ஆரம்பிக்கப் படும் என்று வடமாநில வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

சைவ இந்துசமய ஆசிரியர்களுக்கும், சமய ஆர்வமுள்ளவர்களுக்குமான விசேட சைவ சமய இலவச பயிற்சி வகுப்புகள், நேற்றுக் காலை நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நல்லை ஞானசம்பந்தர்ஆதீன குருமகா சந்நிதானம் அருளுரை வழங்கினார்.

திரு. தி, மாணிக்கவாசகர் ஆரம்பவுரை நிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது:

"சமயமும் வாழ்க்கையும் ஒன்றோடொன்று தொடர்பு பட்டவை. வாழ்க்கையிலிருந்து சமயத்தைப் பிரித்துவிட முடியாது. பிறப்பு முதல் இறப்புவரை ஒரு மனிதன் பல சமய சடங்குகளுக்குள்ளாகின்றான். சமயத்தைக் கைக்கொள்பவன், நடைமுறையிலும் அதனை நிரூபித்துக் காட்டவேண்டும். சைவசமயத்தைச் சேர்ந்த ஒருவர், சமயதத்துவ முறையில்கிரியை முறைகளை அனுசரித்து வாழ்க்கையை நடத்த முன்வரவேண்டும்.

"பௌத்தர்களுக்கென்று ஒரு பௌத்த கல்லூரி மீரிகமவில் இருக்கிறது. இதுபோல சைவர்களுக்கென்றுஒருசைவக் கல்லூரி தமிழ்ப்பகுதியொன்றில் விரைவில் அரசாங்கம் ஆரம்பித்துவைக்கும். குறிப்பாக மற்றைய மதங்களில் சமய குருமார்களே சமயபாடங்களைப் போதிக்கின்றார்கள். நமது சமயத்தில் அப்படி இல்லை. சைவசமயக் கல்லூரி அமைக்கப்படும்பட்சத்தில் சமயக்கல்வியை, சைவப் புலவர்களும் தேர்ச்சிபெற்றவர்களும் போதிக்கும்நிலை வரும்"

### பொன்னாடை

நல்லைஞானசம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம், வடமாநில வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

---

## சந்திரோதய பொன்விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை பொன்விழா வித்தியாசாலை திறந்த வெளி அரங்கில் அதிபர் திரு. ப. சிவசுப்பிரமணியம் தலைமையில் நேற்றுமாலை நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் வடமாநில வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் சலந்து கொண்டார். பரிசில்களை திருமதி ஞானம்பிகை மாணிக்கவாசகர் வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

---

## பாப்பரசர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரளானோர் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்கின்றனர்.

## கொழும்பில் ...

(கொழும்பு)

அன்னாரின் மறைவையொட்டி இன்றுமாலை 5 மணிக்கு கொட்டாஞ்சேனை செண்லூசியஸ் தேவாலயத்தில் பாடற்பூசைநடைபெறுகிறது.

ஜனாதிபதி, பிரதமர் எம்.பி.க்களும் இப்பூசையில் கலந்து கொள்ளுகின்றனர்.

யாழ். ஆசனக்கோவிலில் இன்று காலை 6-15 மணிக்கு வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் கூட்டுப் பலிப் பூசை நடைபெறுகிறது. (இ)

---

## பேரவைக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. அ. அமிர்தலிங்கம், அமைச்சர் மத்யூவின் கூற்றை ஆணித்தரமாக மறுத்துரைத்தார். அவர் நேற்றுப் பேரவையில் கூறியதாவது:

"அமைச்சர் கடந்த 8ந் திகதி இங்கு ஆற்றிய உரையை 'ஹன்ஸார்ட்'டில் பார்த்தேன். யாழ். நாகவிகாரைத் தேரோ கடந்த வருடம் நவம்பர் மாதம் 11ந் திகதி எழுதியிருந்த கடிதம் பற்றி ஒரு வருடத்திற்குப் பின்னர் அமைச்சர் பேரவையில் தெரிவித்துள்ளார்.

"நாகவிகாரைக்கு அருகில் நடந்த கூட்டமொன்றில்நான் எனது மனைவி குறிப்பிட்டதாகச் சில வார்த்தைகளை—நம்பமுடியாதவற்றைப் பற்றி அமைச்சர் மத்யூ இங்கு தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள சிங்களவர்கள் ஒரு சம்பலுக்கும் போதாது என்று நான் அக்கூட்டத்தில் கூறியதாகவும், எனது மனைவி, சிங்களவர்களைக் கொன்று, அந்த இரத்தத்தில் நீச்சலடிக்கப்போவதாகப் பேசியதாவும் அமைச்சர் மத்யூ குறிப்பிட்டுள்ளார் இது உண்மைக்குப் புறம்பானது. நூற்றுக்குநூறு முழுப் பொய்!

"நான் எந்தக் கூட்டத்திலும் பண்பாடற்றமுறையில் பேசுவதில்லை. அமைச்சர்குறிப்பிடும்கூட்டத்திலும் நான்பண்பாடு தவறிப் பேசியிருக்கமாட்டேன். எனது மனைவியும் அவ்விதமாகக் கூறியிருக்கமாட்டார்; கூறமாட்டார். இக்கூற்றை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன்.

"சன்சோனி கமிஷன் முன்பாகவும், பேரவையிலும் இப் பேச்சு இடம்பெற்றிருப்பதால் சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாதிருக்கிறது. பேரவைக்கு வெளியே அமைச்சர் அவ்விதமாகக் கூறியிருந்தால் சட்ட நடவடிக்கை எடுத்திருப்போம்.

"எனது மனைவி பற்றி இப் பேரவையில் குறிப்பிட்ட அமைச்சர் மத்யூ, ''திரு. அமிர்தலிங்கம் மறுத்தால் மட்டும்போதாது திருமதி அமிர்தலிங்கமும்இங்கு வரவேண்டும்' என்று கூறியுள்ளார். அமைச்சர் கூறுவதுபோல, மனைவியை இங்கு கொண்டுவந்து விளக்கம் அளிக்கவும்முடியாதுஎன்று திரு.அமிர்தலிங்கம் கூறினார்.

### சபாநாயகருக்கு 'யோகேஸ்வரன் நன்றி

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தமது உரையில் சபாநாயகருக்கு நன்றி தெரிவித்திருந்தார்.

"அமைச்சர் மத்யூ, எம்மைப் பற்றி உண்மைக்குப் புறம்பாகப் பேசிக்கொண்டிருக்கையில், சபாநாயகர் நியாயமான முறையில் குறுக்கிட்டு அமைச்சருக்குப் பதிலளித்ததற்காக நான் அவருக்கு நன்றி கூறுகின்றேன்'' என்று திரு. யோகேஸ்வரன் நேற்றுப் பேரவையில் தெரிவித்தார். (ம)

---

# துன்னாலையில் இரு கோஷ்டி மோதல்கள்: 23 பேர் காயம்!

## 15 பேர் கைது

(பருத்தித்துறை)

துன்னாலை தெற்கு, கலிகைச் சந்தியடியில் நேற்று நடைபெற்ற கோஷ்டி மோதலை அடுத்து ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் 16 பேர் காயமுற்றனர். இவர்களில் 9 பேர் பருத்தித்துறை. யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸார் 15 பேரைக் கைதுசெய்து பருத்தித்துறை நீதிபதியின் முன்னிலையில் ஆஜர்செய்தபோது இவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதே கிராமத்தைச் சேர்ந்த குடவத்தை என்னும் பகுதியில் நடைபெற்ற கோஷ்டி மோதலிலும் 7 பேர் பலத்த சாயங்களுக்குள்ளாகி பருத்தித்துறை, யாழ்ப்பாணம் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இக்கோஷ்டி மோதலில் வாள், கத்தி என்பவை பாவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வீடும் இம்மோதலைத் தொடர்ந்து தீச்சிரையாக்கப்பட்டுள்ளது.

இவ்விரு சம்பவங்கள்தொடர்பாகவம் பருத்தித்துறைப் பொலிசார் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர், (இ)

---

## லொறியை மறித்து கொள்ளை

(மதவாச்சி)

யாழ்ப்பாணம்-கண்டி வீதியில் அதிகாலைவேளை, லொறி ஒன்று ஆயுதம் தாங்கிய கோஷ்டியினால் வழிமறிக்கப் பட்டு, மிளகாய் மூடைகள், தங்க மோதிரம், ரொக்கப் பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக மதவாச்சிப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

அதிகாலை 3-30 மணியளவில் வழியில் மரக்கட்டைகளைப் போட்டு, லொறியை மறித்த ஆயுதக் கோஷ்டியினர், அதிலிருந்தவர்களிடமிருந்து 190 ரூபா ரொக்கப் பணம், 350 ரூபா பெறுமதியான தங்கமோதிரம், 5 மிளகாய் மூடைகள் என்பனவற்றைக் கொள்ளையடித்தனர். (உ-இ)

---

## அமிரின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரம் பாதிக்கப்படும். எவரும் இது தொடர்பாக, நீதிமன்ற விவகாரத்தில் தலையிடாமல் இங்கு வசதிடமுடியாது. இந்நிலையில் இச்சட்டமூலத்தின் மீது உறுப்பினர்கள் எவ்வாறு சுதந்திரமாக கருத்துவெளியிடமுடியும்?

அடுத்து சபாநாயகர் தீர்ப்பு வழங்குவதற்காக சபை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப் படும் எனக்கூறி சபையை ஒத்திவைத்தார்.

10-35க்கு ஒத்திவைக்கப் பட்டசபை மீண்டும் 11-54க்கு ஆரம்பமானபோது அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு அமைய மேற்படி சட்டமூலத்தை இங்கு விவாதிக்கமுடியுமென்று கூறிய சபாநாயகர் திரு. அமிர்தலிங்கத்தின் ஒழுங்குப்பிரச்னையை நிராகரித்தார். (ப-இ)

---

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ சபாரத்தினஐயர்

மணற்காடு காரைநகர் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ சோமசுந்தரஐயர் விசாலாட்சி அம்மா அவர்களின் மூத்த புதல்வரும் திருமதி அனந்தலட்சுமி அம்மாவின் அன்புக் கணவரும் பிரம்மஸ்ரீ ஈஸ்வர சர்மா, காலஞ்சென்ற ஸ்ரீ நடேசசர்மா, ஸ்ரீ கணேச சர்மா, திருமதி ஈஸ்வரி சத்தியோசாதம், செல்வி ஜெயலஷ்மி ஆகியோரின் அன்புத்தந்தையாரும் காலம் சென்ற திருமதி லலிதாம்பாள், தெல்லிப்பளை ஆசிரியர் பிரம்மஸ்ரீ சத்தியோசாதசர்மா, திருமதி ருக்மணி அவர்களின் அன்பு மாமனாரும் செல்வன் முருகசிவம், சிவராம், சிவதாஸ், சிவசாந், முகுந்தன், ஆனந்தன் ஆகியோரின் அன்பு பாட்டனாரும் ஆகிய இளைப்பாறிய முதலியார் பிரம்மஸ்ரீ சபாரத்தின ஐயர் அவர்கள் 11-8-1978 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார். அன்னாரது இறுதிச்சடங்குகள் அன்று மாலை நல்லூர் செம்மணி மயானத்தில் நடைபெற்றது. 0039


## "ஐஸ்" பாவனையாளர்கட்கு ஒரு நற்செய்தி!

யாழ்ப்பாணத்தில் ஐஸ் விற்பனைக்கு:

R. T. நிறுவனமாகிய நோத் மறைன் ஸ்தாபனத்தின் புதிய உற்பத்தி

1|2 அந்தர் கட்டி விலை ரூபாய் 6|-

உங்கள் வசதிக்காக 24 மணிநேரமும் வினியோகிக்கப்படும்.

தொடர்புகொள்ளுங்கள்:

R.T. ஐஸ் தாபனம்,
143, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்: 7108

0034

குளு குளு கப்பலில் உல்லாசப் பயணம்

## சிதம்பரம்

புறப்படுதல்: திருகோணமலையிலிருந்து 30 ஆகஸ்ட் 1978.

தங்குமிடங்கள்:

பினங்கு — 3-9-78 (24 மணி நேரம்).
சிங்கப்பூர் — 5-9-78 (3-4 நாட்கள்).
கெலாஸ் துறைமுகம் — 9-9-78 (12 மணி நேரம்).
பினங்கு — 10-9-78 (12 மணி நேரம்).
சென்னை — 15-9-78 (4-5 நாட்கள்).

திரும்புதல்: திருகோணமலைக்கு 21 செப்டம்பர் 1978. சென்று திரும்புவதற்கு இந்தப் பிரயாணத்துக்கு மட்டும் கட்டணம் இலங்கை ரூபாவில்: டிலக்ஸ்: 6325/-, டோர்ம் 1; 3810/-, கபின் A: 5555/-, கபின் B;5000/-. பங்க்: 3125/-. குறிப்பிட்ட அளவு கபின் வசதிகளே உண்டு

மேலும் விபரங்களுக்கு:

ஆஷா ஏஜன்ஜீஸ் லிமிட்.
72, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4.
போன்: 87892-3.

0032

## சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம் காரைநகர்

## வெற்றிடங்கள்

### சாரதி:

(1) சாரதி பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு. பின்வரும் தகமையுடையோர் விண்ணப்பிக்கவும்.

கல்வி- தமிழ் எழுத, வாசிக்கத் தெரிந்தவராக இருத்தல்வேண்டும். ஆங்கில அறிவு மேலதிகத் தகமையாகக் கொள்ளப்படும்.

அத்துடன்

மோட்டார் கோச் சாரதிக்கான அத்தாட்சிப் பத்திரம் உடையவராயும்;
குறைந்தது லொறிச் சாரதியாக 5 வருட அனுபவம் உடையவராயும்;
இலங்கையிலுள்ள நெடுஞ்சாலைகள் தெரிந்தவராயும்;
40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

### தச்சு வேலையாட்கள்:

(2) 21 வயதுக்குக் குறையாத, பிரபல்யமான ஸ்தாபனத்தில் 8 வருடத் தச்சுவேலை அனுபவமுடையவர்கள் விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

### வர்ணம் திட்டுபவர்கள்:

(3) 25 வயதுக்கு மேற்பட்ட, குறைந்தது 5 வருட அனுபவமுடையவர்கள் விண்ணப்பித்துக்கொள்ளலாம். தெளிதல் வர்ணவேலை தெரிந்தவர்கள் விருப்பத்தக்கது.

விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 21ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,
காரைநகர்.

0036



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12- திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone 389 - Registered as a News paper in SriLanka